4th August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) தர்மபுரி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவ கங்கை, மானாமதுரை தாலுகாக்களில் வரிவஜா செய்யப்பட்டாலும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார்கள். இந்த ஆண்டு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபோது பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு கெடுபிடி, ஜப்தி போன்றவற்றை யெல்லாம் செய்கிறார்கள். ஆகவே பழைய பாக்கிகளை இப்பொழுது வசூல் செய்யாமல் இருப்பதற்கு முயற்சியெடுப்பார்களா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question regarding arrears.

Groundnut crop

* 82 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether it is a fact that groundnut crop in Madurai and Ramanathapuram districts have been badly affected by drought conditions ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) In Ramanathapuram district, in Fasli 1375, the groundnut crops were badly affected only in Srivilliputhur taluk and Manamadurai Sub-taluk due to drought conditions. The yield was 2 annas and below.

In Madurai district also the groundnut crops were affected due to drought conditions. The yield was 20 per cent to 50 per cent of the normal yield in most parts of the district except in Madurai Division, where the yield was 50 per cent to 70 per cent.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி விளைச்சல் இல்லாத நிலையில் சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது எல்லாம் புன்செய் சாகுபடி அதற்கு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம் என்ன என்ன கொடுக்க முடியுமோ அதைக் கொடுப்பார்கள்.

கிராம ரிக்கார்டுகளைக் கட்டுவதற்கு கித்தான்

* 83 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஆண்டுதோறும் நடந்து வருகின்ற ஜமாபந்திக் கூட்டத் தின்போது மட்டும் கிராம ரிக்கார்டுகள் பூராவும் கித்தான் சாக்கில் கட்டி தூக்கிக்கொண்டு வருவதற்கு விசேஷ காரணங்கள் ஏதேனும் உண்டா ?